சேலத்தில் அறநிலையத்துறை துணை ஆணையர் அலுவலகம்.

778—(*வினா எண் 5176) திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணை யர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சேலத்தில் அற நிலையத்துறை துணை ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 779 மற் றும் 780 மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

புளியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி.

781—(*வினா எண் 4308) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டியில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்காக வாங்கப்பட்ட ஆறு ஏக்கர் நிலத்தில் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ): இப்பள்ளிக்கு இவ்வாண்டு (1985-86) தமிழ் நாட்டுப்பாட நூல் நிறுவனம் வழங்கிய நன்கொடைத் தொகையிலிருந்து ரூ. 1.50 இலட்சம் செலவில் இரு வகுப்பு அறைகள் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இப்பணியை உடனடியாகத் தொடங்குமாறு கட்ட டத்துறை தலைமைப் பொறியாளருக்குப் பள்ளிக் கல்வி இயக் குநரால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

நாடகத் தமிழை ஊக்குவித்தல்

782—(*வினா எண் 4651) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) முத்தமிழில் ஒன்றான "நாடகத் தமிழை" ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) நாடகக் கலைஞர்களுக்கு பாதுகாப்பு நிதி வழங்கிட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) முத்தமிழில் ஒன்றான "நாடகத் தமிழை" ஊக்குவிக்க அரசு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவை :—

(1) சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்களை நடத்தும் நாடகக் குழுக்களுக்குப் புதியநாடகத் தயாரிப்புக்கென்று நிதி வழங்கும் திட்டத்தின்படி மானியம் வழங்குதல்.

(2) நாடக மேடைப் பொருள்களான காட்சி அமைப்பு, உடைகள், மின் ஒலி, ஒளி கருவிகள் போன்ற தொழிற்சாதனங்களைத் தொழில்முறை நாடகக் குழுக்கள் வாங்கும் வண்ணம் இயன்ற அளவில் நிதியுதவியை வழங்குதல்.

(3) 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடப்பதோடு வெள்ளி விழாக் காணும் நாடகக் குழுக்களுக்கு வெள்ளி விழாவினை சிறப்புடன் நடத்திட உரிய மானிய உதவி அளித்தல்.

(4) ஆண்டுதோறும் சிறந்த நாடகக் குழுக்களைத் தேர்ந்தெடுத்து முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் நிறுவியுள்ள சுழற்கேடயம் ஒன்றை 1978 ஆம் ஆண்டு முதல் வழங்கி கௌரவித்து வருதல்.

(5) சிறந்த நாடகங்களை நூல் வடிவில் வெளிக்கொணர மானியம் கொடுத்தல்.

(6) நாடகத் துறையில் இளங்கலைஞர்கள் உருவாகும் வண்ணம் இளைஞர்களை டெல்லியிலுள்ள நாடகப் பள்ளியில் (நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமா) பயிற்சி பெற உதவி நிதி வழங்குதல்.

(7) நாடகத் துறையில் பல்வேறு வகையில் சிறந்த சேவை செய்து வரும் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் "கலைமாமணி" விருதுகள், பொற்கிழி போன்றவற்றை வழங்கி ஊக்குவித்தல்.

(ஆ) ஆம்.

(இ) நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் வாயிலாக நாடகக் கலைஞர்களுக்கும், மாதந்தோறும் உதவித் தொகை தலா ரூ. 150 அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது.

(முற்பகல் 9–20)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இந்த அரசினுடைய பாதுகாப்பு நிதி பெறும் நாடகக் கலைஞர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், இந்த நாடகக் கலைஞர்கள் எந்த அடிப்படையில் பாதுகாப்பு நிதி பெற தேர்வு செய்யப்படுகிறார்கள். இதற்கென தகுதியுடைய குழுக்கள் ஏதேனும் அமைக்கப்பட்டு இருக்கின்றனவா? இல்லையெனில் இனியாவது அப்படி ஒரு குழு அமைத்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து உதவ, இந்த நிதியினை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் வாயிலாக தமிழகம் எங்கும் இதுவரையில் 1,761 வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களில் நாடகக் கலைஞர்கள் பெரும்பான்மையானவர்கள். முறைப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அதை வைத்து தேர்வு செய்து கூடுமான வரையில் வறுமையில் வாடுபவர்களுக்கு உதவி செய்து வருகிறோம்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு மாதம் 150 ரூபாய் உதவித் தொகை, அதாவது பாதுகாப்புத் தொகை வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நாடகக் கலைஞர்கள் அன்னியில் நாதஸ்வர வித்துவான்கள், தவில் வித்துவான்கள், புல்லாங்குழல் வித்துவான்கள் என்ற இப்படிப்பட்ட துறைகளைச் சேர்ந்த வயது முதிர்ந்த, ஒரு காலத்தில் புகழ்படைத்தவராக வாழ்ந்த கலைஞர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா? சிலரைப் பொறுத்தவரையில் எத்தனை முறை விண்ணப்பித்தாலும் கிடைக்கவில்லை என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. அத்தகைய குறைபாடுகள் வராத வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நாடகக் கலைஞர்களைப் பாதுகாக்க வேண்டும். இதனை அமைச்சர் அவர்கள் பரிவோடு கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே வறுமையிலே வாடுகிற கலைஞர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்றுதான் இருக்கிறோம். ஆகவே முறைப்படி அவர்கள் விண்ணப்பித்தால் உரிய வகையில் அதற்

கான ஏற்பாடு செய்யப்படும். அதிலே ஏதாவது குறைகள் இருந்தால், என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

அரூரில் புதிய பாலிடெக்னிக்.

783—(*வினா எண் 5544) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், அரூர் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கே ஒரு கலைக் கல்லூரியையாவது ஏற்படுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருந்தார்கள். இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக்காவது ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியில் இருக்கிற, அரூர் வட்டத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாய மக்கள் அதனால் பயன் அடைய வாய்ப்பிருக்கிறது. அங்குள்ள உயர்நிலைப் பள்ளிக்கு உரிய இடத்தில்—25 ஏக்கர் இடம் அரூரில் இருக்கிறது—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய ஆதரவில் புதிய பாலிடெக்னிக் அமைக்கிற கருத்துரு எதுவும் யோசனையில் இல்லை. ஆகவே இப்போது அரூரில் அரசாங்க சார்பில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கிற எண்ணம் இல்லை. தனியார் யாராவது முன்வந்தால் அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் பாலிடெக்னிக் ஆரம்பிப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு சேர்த்து கிருஷ்ணகிரியில் நடைபெறுகிற பாலிடெக்னிக்கை என்ஜினியரிங் கல்லூரியாக மாற்றுவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது செயற் குறிப்பு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரூரில் இல்லை என்று சொன்னதற்குக்